9454

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015**

Limited Competitive Examination for the Recruitment to the Class 3 of the Sri Lanka Principals' Service - 2015


**(i) கிரகித்தல்**
Comprehension

**ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்**
One hour and 30 minutes

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



**உமது சுட்டெண்ணை இங்கே எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

- ✳ இவ்வினாத்தாள் **6** பக்கங்களில் **3** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்** ஆகும்.
- ✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- ✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- ✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்
- ✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- ✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
- ✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துக்கள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| **வினா எண்** | **பெற்ற புள்ளிகள்** |
|---|---|
| 1 (i) | |
| 1(ii) | |
| 2 | |
| 3 | |
| **மொத்தம்** | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

(iv) குறிப்பாக தற்பொழுது இடம்பெற்றுவரும் குடித்தொகையியலின் மாற்றத்திற்குள்ளாகும் தன்மை மற்றும் தொற்றுநோய்களிலிருந்து தொற்றா நோய்கள் வரையான நோய்களில் ஏற்படும் மாற்றங்களில் தொற்றாத நோய்கள் இடம்பெறுவது அதிகரித்துச் செல்வது நலத்துறை அதிகாரிகளின் கவனத்தினைத் தொடர்ந்தும் ஈர்த்து வருகின்றது. இலங்கையில் இடம்பெறும் வருடாந்த இறப்பில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை மார்பு நாள நோய்கள், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் கடுமையான சுவாசநோய்கள் போன்ற நீண்டநாள் தொற்றாத நோய்களினாலேயே ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை நோய்த் தன்மைகளுக்கும் உடல் ஊனங்களுக்கும் கூட இட்டுச் செல்கின்றன.

(அ) தொற்றும் நோய்களிலிருந்து தொற்றா நோய்கள் வரையான நோய்களின் பரம்பல் நலத்துறை அதிகாரிகளின் கவனத்துக்குள்ளாகி உள்ளது.

(ஆ) இவ்வுரைப் பகுதியில் தொற்றாநோய் நிலைமைகள் பற்றிய மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) இலங்கையில் ஆண்டொன்றுக்கான இறப்பில் நூற்றுக்கு 70 வீதமானவை தொற்றா நோய்கள் காரணமாக ஏற்படுகின்றன.

(ஈ) சுகாதார அதிகாரிகளின் தொடர்ச்சியான கவனம் தொற்றா நோய் நிலைமை அதிகரித்து வருவதில் செலுத்தப்படுகிறது.

..............................................................................................................

(v) ஓர் உத்தியோகத்தர் தனது தகுதிகூர் காலத்தில் நிரந்தரமாகத் தன்னை வைத்திருப்பதற்கான தனது தகவு பற்றி ஐயம் ஏற்படக்கூடிய சார்புகள் ஏதேனும் காட்டுவாரானால் அவர் உடனே எச்சரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவர் தனது தவறுகளைத் திருத்தக்கூடிய அத்தகைய உதவியையும் அவருக்கு அறிவித்தல் வேண்டும். அந்த உத்தியோகத்தர் அவரது தவறுகளுக்காக எச்சரிக்கப்பட்டுத் திருத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாரா என்ற பிரச்சினை பின்பு எழாதவாறு தொடர்ந்து செய்வாராயின் அவரது வேலை உறுதிப்பாட்டைத் தடை செய்யக் கூடியதான ஏதேனும் பாரிய செயலுக்காக அல்லது தவறுக்காக அல்லது மோசடியான நடத்தைக்காக அல்லது பண்புக்காக ஏதாவது கடிந்துரை வழங்கப்பட்டிருந்தால் அதை அந்த உத்தியோகத்தருக்கு அறிவித்து அதை அவர் பெற்றமை குறித்த பதிலையும் பெறல் வேண்டும்.

(அ) தகுதிகூர் காலத்தின்போது அலுவலகர் ஒருவருக்கு எச்சரிக்கை வழங்கக்கூடிய மூன்று சந்தர்ப்பங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) பின்னர் பிரச்சினை எழாதவிடத்து ஆவணங்கள் இன்றியேனும் அலுவலருக்கு எச்சரிக்கை வழங்கலாம்.

(இ) தகுதிகூர் கால எல்லையினுள் உரிய அலுவலகர் தொடர்பில் எப்போதும் ஆராய்வு மனப்பாங்கிலேயே நோக்குதல் வேண்டும்.

(ஈ) எச்சரிக்கை வழங்குவதற்குரிய கடிதத்தை பெற்றுக் கொண்டதாக அலுவலகரின் கையொப்பத்தைப் பெறுவதனால் விரும்பிய நேரத்தில் அவரைச் சேவையிலிருந்து விலக்கி விட முடியும்.

..............................................................................................................

* * *

**3.** பின்வரும் ஒவ்வொரு உரைப்பகுதியின் இறுதியிலும் தரப்பட்டுள்ள கூற்றுகளில் உரைப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளுடன் மிகவும் பொருத்தமான கூற்றினைக் குறிப்பிடுக. (உதாரணமாக (i) உரைப்பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுகளில் மிகப் பொருத்தமானதென நீங்கள் கூற்று (அ) இனைக் கருதினால் உங்கள் விடை (i) ...... அ என்பதாகும்.)

(i) முதலாம் உலகயுத்தம் மக்களின் சுயநிருணயத்திற்காக நடந்ததெனச் சொல்லக் கூடுமாயின் இரண்டாம் உலகயுத்தம் மக்களாட்சிக்காகவே நடந்ததெனலாம். சுயநிருணயமும் மக்களாட்சியும் இவ்விரு பெரும் போர்களின் இறுதிப் பயனாக எழுந்த தேசிய வாதத்தின் இரட்டை முகங்களாகும். ஆசிய மக்களைப் பொறுத்தவரை தேசிய வாதத்தின் எழுச்சியானது அவர்களது அரசியல் அபிலாசைகளை எடுத்துக் காட்டியது. இவ்விதிக்கு இலங்கையும் விலக்கன்று. ஆராய்விற்கெடுத்துள்ள 40 ஆண்டுக்காலத்தின் இரண்டாம் பகுதியில் இலங்கை அரசியலிலே தேசிய வாதத்தின் எழுச்சியே முனைப்பாகக் காணப்பட்டது.

(அ) முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களுக்கு தேசியவாதம் செல்வாக்குச் செலுத்தின என இந்த உரைப்பகுதி மூலம் ஊகிக்கலாம்.
(ஆ) ஆசிய நாடுகளில் பல்வேறு இனங்கள் வசிப்பதால் அவர்களிடையே தேசியவாதம் தோன்றுவது ஆச்சரியமன்று.
(இ) இனங்களின் சுயநிருணயம் ஏற்படுவதுடன் ஜனநாயகத்திற்கான போராட்டம் ஏற்படுதல் இயல்பானதாகும்.
(ஈ) உலக அரசியலில் ஏற்படும் முக்கிய மூன்று இயக்கங்கள் பற்றிய தகவல்கள் இவ்வுரைப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

..........................................................................................

(ii) உயர்நிலைப் பாடசாலையொன்றில் நிகழும் வேலை உயர் நிலைத்தன்மைபெறுவது எவ்வாறெனில் முதலாவதாக தன்னுணர்வோடுகூடிய எண்ணம் தீர்ப்பு என்பவற்றாலும் இரண்டாவதாக மாணவரை ஒரு பகுதியாகக் கொண்டதும் மாணவரால் மேன்மேலும் உணரப்படுவதுமாகிய வெளியுலகோடு பாடசாலையும் அங்கு நடைபெறும் வேலையும் தொடர்புறுவதாலும் மூன்றாவதாக பாடசாலையில் நடைபெறும் வேலை மாணவரின் வருங்கால வாழ்க்கையோடு அதாவது முதிர்ந்த பருவத்தில் அவர்கள் மேற்கொள்ளவிருப்பதாகக் காணும் அல்லது அவர்களுக்குக் காண்பிக்கப்படும் வாழ்க்கைப் பாங்கோடு, தொடர்புறுவதாலுமே அது உயர்நிலைத் தன்மை பெறுகின்றதென்க. இப்பண்புகளில் முதலாவதான தன்னுணர்வுடைய தீர்ப்புச் செய்யும் தன்மை, மற்றைய இரண்டிலுமிருந்து வேறுபடுகின்றது. இது மாணவர் தாம் பொறிவாயிலாக அறியும் பொருள்களில் எல்லாம் ஓர் ஒழுங்கைக் காண்பதற்குத் தருக்கவாதத்தையும் கற்பனையையும் பயன்படுத்தும் ஓர் உளத் தொழிற்பாட்டு முறையை விவரிக்கின்றது. ஏனையிரண்டு பண்புகளும் மாணவர் தமது தீர்ப்புச் செய்யும் ஆற்றலை விருத்தி செய்ய வேண்டின், இந்த உளத் தொழிற்பாட்டு முறை எத்திசையிற் செலுத்தப்படவேண்டுமென்பதை வரையறுத்துக் காட்டுகின்றன.

(அ) உயர்நிலைப் பாடசாலை என்பது மாணவர்களுக்கு தன்னுணர்வோடு கூடிய எண்ணம் மற்றும் தீர்ப்பு என்பவற்றை மட்டும் வழங்கும் நிறுவனமாகும்.
(ஆ) பாடசாலையில் நடைபெறும் வேலைகள் மாணவர்களின் வருங்கால வாழ்க்கையுடன் தொடர்புறுதலே உயர்நிலைப் பாடசாலைகள் காட்டும் வெற்றிகரமான பயிற்சியாகும்.
(இ) உயர்நிலைப் பண்புகள் என்பவற்றிற்கு உரிய மூன்று அடிப்படை விடயங்கள் பற்றிய தகவல்கள் இங்கு அடங்கியுள்ளன.
(ஈ) மாணவர் தாம் பொறிவாயிலாக அறியும் பொருள்களில் ஓர் ஒழுங்கைக் காண்பதற்கு தருக்க வாதத்தையும் கற்பனையையும் பயன்படுத்தும் உளத்தொழிற்பாட்டை மாணவரின் எதிர்கால வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தலே உயர்நிலைப் பாடசாலையின் நோக்கமாகும்

..........................................................................................

(iii) ஒல்லாந்தர் விட்டுச்சென்ற கல்வியமைப்பு முறையிலே திருச்சபையும் அரசாங்கமும் இணைந்து கல்வி வசதிகளை அளித்து வந்தன. பிரித்தானியர், இங்கிலாந்தில் நடைமுறையிலிருந்த திட்டத்தை இந்த முறையின் அடிப்படையில் அமைத்தனரேயன்றிச் சிறப்பாக வேறொன்றுஞ் செய்ய முயலவில்லை. 19 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே பொதுமக்களுக்குக் கல்வியளிக்க வேண்டிய தேவையை ஆட்சியாளர் மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டனர். உள்ளூர்ச் சபைகளும் தனிமனிதரும் இணைந்து நிதியுதவி அளித்து ஆதரித்து வந்த ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலை இயக்கமூலமும் தருமப் பாடசாலை இயக்க மூலமும் தொழிலாளர் வகுப்பினருக்கு ஆரம்பக்கல்வி அளிக்கும் முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறே இலங்கையிற் பாடசாலை முறைமையொன்று உருவாகியது. இது சமூகத்திற் பெரும்பகுதியினருக்குக் கல்வியளித்து வந்ததாயினும் சமூக வேற்றுமைத் தடைகளை வலுப்படுத்தி வகுப்புகளைப் பிரித்து வைப்பதாயிருந்தது. தருமப் பாடசாலைகளும் கிராமப் பாடசாலைகளும் சமூகத்தின் ஒரு பிரிவினருக்குக் கல்வியூட்டிவர பிரசித்தி வாய்ந்த பாடசாலைகள், உயர்குடிமக்களுக்கும் செல்வர்களுக்குமே தனியுரிமையுடையனவாயிருந்தன.

(அ) இந்நாட்டு மக்களுக்குக் கல்வி வழங்குவதில் பிரித்தானியர்கள் ஆர்வம் காட்டியதாகத் தெரிய வருகிறது.
(ஆ) கல்வி நிறுவனங்களின் மூன்று வகைகள் பற்றிய தகவல்கள் இவ்வுரைப் பகுதியில் காணப்படுகின்றன.
(இ) வகுப்பு வேறுபாட்டுக்கேற்ப பிரித்தானியர் கல்வி நிறுவனங்களை நடத்தியமை அதன் மூலம் அரச நிர்வாகத்துக்கு வசதிகளை ஏற்படுத்தமுடியுமென்பதாலாகும்.
(ஈ) உதவிபெறும் பாடசாலைகளையும் உதவி பெறாத பாடசாலைகளையும் ஏற்படுத்துவதே பிரித்தானியரின் கருத்தாக இருந்தது.

..........................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

**1.** பின்வரும் உரைப் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) இந்நாட்டின் ஓவியக் கலை, பொறியியற்றிறமை, கைவினைத்திறன் ஆகியவற்றுக்கு ஓர் சான்றாகத் திகழ்வது சீகிரியப் பாறையரண், தனது குறுகிய ஆட்சிக் காலத்திலே, இந்தக் கரடுமுரடான பாறையைப் பகைவர் கடத்தற்கரிய பாரிய அரணாக மாற்றியதோடு, நீராடு கேணிகளும் சித்திர குகை வழிகளுங் கொண்டதாக ஆக்கிய காசியப்ப மன்னனை கலைப்படைப்புத்திறன் மிக்க விஸ்வகர்மா கூட தலை வணங்கும் பெருமையை உடையவன் எனக் கூறப்படுகிறது. இக்குகை வழிகளுள் ஒன்றிலே காணப்படும் சுவரோவியங்கள், காலத்தால் அழியாதும், கல்லா மூடர்களின் நாச வேலைக்குத் தப்பியும், இன்றளவும் நிலைபெற்றிருந்து, உலகின் பல பாகங்களிலுமிருந்து வரும் பார்வையாளருக்கு வியப்பையும் திகைப்பையும் ஊட்டி வருகின்றன. மேற்கு குகை வழியின் பளிங்குச் சுவரிலே, கி.பி. 8 ஆம், 9 ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளிற் காட்சி காணவந்தோர் பலர், தங்கள் மனப்பதிவுகளைச் சிறிய எழுத்துக்களிற் கவனமாகப் பொறித்து வைத்துப் போயுள்ளனர். இத்தொகுதியில் தனியோர் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ள இச்சுவரெழுத்துக்கள், அக்கால மக்களின் கல்வியறிவுக்கும் பண்பாட்டுக்கும் அறிகுறியாக விளங்குகின்றன. இச்சுவரெழுத்துக்கள், அக்காலத்திற் சிங்கள வரிவடிவும், மொழியும் விருத்தியடைந்தவாற்றை ஆராய்வதற்குத் துணை செய்வதோடு, சீகிரியச் சுவரோவியங்களின் எழிலையும், சிங்கமுக வாயிலின் மாட்சியையும், ஒப்பமான அப்பளிங்குச் சுவரிலே பிறர் பொறித்து வைத்த கவிதைகளையும் கண்டு சுவைத்து மகிழ்ந்தோர் தம் மனப்பாங்கை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. அழகினை நயக்கும் ஆற்றலும், உள்ளத்துணர்வைச் சொற்களில் வெளிப்படுத்தும் மொழியாட்சியும், சிறப்பாக தேவை ஏற்படும்போது செய்யுள் வடிவிற் கருத்தை வெளிப்படுத்தும் வல்லமையும் ஆகிய இவையெல்லாம் அக் காலத்திற் சிங்கள மக்கள் கல்வியில் அடைந்திருந்த தகைமைக்கு ஓர் அளவுகோலாய் இருப்பதோடு வளமான மரபொன்று இருந்ததென்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

(அ) சீகிரியாவின் சிறப்பை வெளிப்படுத்துகையில் இந்த ஆசிரியர் தனது கவனத்தைச் செலுத்துகின்ற பல்வேறு பிரிவுகளும் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

(ஆ) சீகிரிய சுவரெழுத்துகளுக்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

(இ) சீகிரிய சுவரெழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் சிறப்பு அம்சங்கள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

(ஈ) சீகிரியாவிலுள்ள குகைகளின் சிறப்பம்சம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

(உ) காசியப்ப மன்னனை விஸ்வகர்மா கூட தலை வணங்கி மரியாதை அளித்ததாக இந்த ஆசிரியர் கூறுவதின் காரணம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

[பக் 3 ஐப் பார்க்க.

(ii) சிறந்த நிருவாக ஆற்றல் வாய்ந்தவர்களான இயேசுசபையார், பொதுவாக மூன்று பிரிவுகளைக் கொண்ட கல்லூரிகளை அமைத்தனர்; ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை என்னும் இம்மூன்று பிரிவுகளும் ஒரே அதிபரின் தலைமையில் இயங்கின; இவ்வதிபர் எப்போதும் ஒரு சமய குருவாகவே இருந்தார். இயேசுசபையார் தமிழ் மொழி மூலம் கல்வி பயிற்றலின் அவசியத்தை உணர்ந்தனர். ஆதலால், அவர்களின் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி தாய்மொழி மூலம் புகட்டப்பட்டது இங்கே வாசிப்பு, எழுத்து, பாட்டு என்பவற்றோடு சமயமும் நற்பழக்கமும் கற்பிக்கப்பட்டன. நாடகமும் சங்கீதமும் சமயத்தைப் பரப்புவதற்கு இன்றியமையாதனவென்பதையும் இவர்கள் உணர்ந்தனர். திருச்சபைப் பெருநாள்களில் விவிலியவேத வரலாற்றிலுள்ள காட்சிகளை நாடகமாக அமைத்து நடித்தனர். இந்நாடகங்களில் சிறுவர்கள் பெரும் பங்கு கொண்டனர். இயேசு சபையினர் கல்வித்துறையில் இறங்கியதும், போத்துக்கேயர் ஆட்சிப் பகுதிகளிலே கல்வி வசதிகள் பெருகின. இவ்வாறு எல்லா கல்வி நிலையங்களும் திருச்சபையிலிருந்தே தோன்றியமையால், திருச்சபை அதிகாரிகளே அவற்றை மேற்பார்வையிட்டும் கட்டுப்படுத்தியும் வந்தனர்.

ஆரம்பக்கல்வி ஒவ்வொரு கோயிற்பற்றிலுமுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும் அளிக்கப்பட்டதாயினும், உயர்நிலைக் கல்வி, குடியியல், போரியல் என்னும் இரு துறைகளிலும் கடமையாற்றிய போர்த்துகேய அதிகாரிகளின் பிள்ளைகளுக்கும் சிங்களப் பிரமுகர்களின் பிள்ளைகளுக்குமே அளிக்கப்பட்டது. இடைநிலைப் பாடசாலைப் பாடவிதானத்தில் வாசிப்பு, எழுத்து, "மக்கட்பண்புக் கலைகள், சொல்லணிக்கலை" என்பவற்றோடு விவிலியவேதமும் இடம்பெற்றிருந்தன. ஐரோப்பா அடங்கலுமுள்ள பாடசாலைகளிற் போலவே, இலத்தீன் கற்பித்தல் இங்கும் உயர்கல்வி பாடவிதானத்தில் முக்கிய இடம்பெற்றது. இலத்தீன் விவலிய வேதங் கற்பதோடு நெருங்கிய தொடர்புடையதாயும், உயர்தரக் கல்வித் துறைகளுக்குரிய மொழியாயும் இருந்தமையே இதற்குக் காரணமாகும். இடைநிலைக் கல்வி முடிந்தபின் குருமாராக விரும்பியோர், பயிற்சி மடத்தைச் சேர்ந்து சமயத்துறையிலே உயர்நிலைக்கல்வி பெற்றனர். ஆயினும் அரசகுமாரர்களுக்குக் கல்விபுகட்டப் பிரான்சிசுக்கன் குருமாரே வழக்கமாக நியமிக்கப்பட்டனர். இவ்வரசகுமாரர் இளவரசருக்குரிய கலைகளோடு போர்த்துக்கேயம் இலத்தீன் இத்தாலியம் ஆகிய மொழிகளையும் கற்றனர்.

(அ) ஆரம்ப பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் யாவை?

..........................................................................................

..........................................................................................

(ஆ) உயர் கல்வி நிறுவனங்களில் காணப்பட்ட பாடவிதானங்கள் எத்தகையவை?

..........................................................................................

..........................................................................................

(இ) இடைநிலைக்கல்வியும் பாடங்களும் எந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன?

..........................................................................................

..........................................................................................

(ஈ) நாட்டில் கல்விவசதிகளில் வளர்ச்சி ஏற்படுவதில் தாக்கம் செலுத்திய காரணியாக இங்கு குறிப்பிடப்படுவது யாது?

..........................................................................................

..........................................................................................

(உ) இயேசு சபையினரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளின் வகைப்படுத்தல் எந்த விதத்தில் அமைந்திருந்தது?

..........................................................................................

..........................................................................................

[பக் 4 ஐப் பார்க்க.

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

## Limited Competitive Examination for the Recruitment to the Class 3 of the Sri Lanka Principals' Service - 2015


### (ii) பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை
### Case Study in School Administration

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

- ✻ இவ்வினாத்தாள் **08** பக்கங்களில் **4** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ✻ விடைகளை எழுதுமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.
- ✻ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
- ✻ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு மணித்தியாலங்கள்** ஆகும்.
- ✻ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- ✻ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- ✻ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்
- ✻ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- ✻ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.
- ✻ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1 (i) | |
| 1 (ii) | |
| 2 (i) | |
| 2 (ii) | |
| 3 | |
| 4 (i) | |
| 4 (ii) | |
| 4 (iii) | |
| **மொத்தம்** | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க)

• 1 தொடக்கம் 4 வரையிலான வினாக்கள் கீழேயுள்ள சம்பவங்கள் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டது.

1. நந்தவனம் மகா வித்தியாலயமானது நகர்ப்புற சூழலில் அமைந்துள்ள தரம் 1 ஏபீ (1AB) வகைப் பாடசாலையாகும். தரம் 1 இல் இருந்து தரம் 13 வரையிலான வகுப்புகள் நடைபெறுவதுடன் அதன் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2000 இற்கு அண்மித்து இருந்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை 100 ஆகும். மாணவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் நகரையும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் வசித்துவரும் நடுத்தர மற்றும் நகரத்தில் வேலை செய்யும் தொழிலாளர் தர குடும்பங்களில் இருந்து வருபவர்களாவார்கள்.

அதிபரான திரு.சரவணபவன் அவர்கள் தூரப் பிரதேசங்களில் கடமையாற்றி ஓய்வைப் பெறுவதற்கு அண்மித்து இப்பாடசாலைக்கு வந்த ஒருவராவார். அவர் தனது வசிப்பிடமான வீட்டில் இருந்து வந்து செல்வதனால் தனது முழுக் கவனத்தையும் பாடசாலையை நடாத்துவதில் செலுத்த முடியாது இருந்தது. கடமை நடவடிக்கைகளில் அதிகமானவற்றை செய்வது பிரதி அதிபரான திரு.சகாதேவனாகும்.

திரு.சரவணபவன் ஓய்வு பெற்றுச் சென்றவுடன் அந்தப் பாடசாலையின் அதிபராக பிரதேசத்தின் பிரபல்யமான பாடசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றிய திரு. சுதாகரன் அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு. சகாதேவன் அவர்களும் அதிபர் பதவியை எதிர்பார்த்து இருந்தாலும் அது தொடர்பாக அதிகாரிகளை சந்தித்து விடயங்களை முன்வைப்பதற்குரிய ஆற்றல் அவருக்கு இருக்கவில்லை.

எதிர்கால அபிலாசைகள் பலவற்றை சுமந்து வந்த திரு. சுதாகரன் அவர்கள் பாடசாலையை முன்னேற்றுவதற்கான எதிர்பார்ப்புடன் வேலைகளை ஆரம்பித்தார். ஆசிரியர்களுள் அதிகளவிலானோர் தாமதமாக வருகை தருவதால் முதலாவது ஆசிரியர் கூட்டத்திலேயே அவர் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னரே சகல ஆசிரியர்களும் வரவேண்டும் என அறிவித்தார். அவ்வாறே ஒவ்வொரு ஆசிரியரும் கிழமைக்கு ஒரு நாளோ அல்லது இரு நாட்களோ பிற்பகல் வேளையில் பாடசாலையில் நின்று மாணவர்களினது இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டுமெனவும் அறிவித்தார். அடுத்த நாளில் இருந்து மு.ப 7.30 மணிக்கு வரவுப் பதிவேட்டில் சிவப்பு நிற கோடு இடவும் மு.ப 8.30 மணிக்கு இரு சிவப்பு நிறக்கோடுகள் இடவும் ஆரம்பித்தார். ½ மணித்தியாலத்தைவிட தாமதமாக வரும் ஆசிரியர்களின் தாமதமான நேரத்திற்கு சமனாகும் நாட்களின் எண்ணிக்கை அமைய லீவில் கழிக்கப்படும் எனவும் அறிவித்தார்.

தாமதமாக வரும் மாணவர்களையும் அதிபரைச் சந்திப்பதற்கு வருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. பாடசாலை நேரத்திலே சில மாணவர்கள் அருகில் உள்ள கடைக்குச் சென்று தேநீர் அருந்துவதற்கு பழக்கப்பட்டிருந்தமையினால் பாடசாலை நேரத்திலே மாணவர்கள் பாடசாலையில் இருந்து வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டது. மாணவர்களின் ஒழுக்கத்தை சக்திமிக்கதாக்குவதற்காக அதிபர் ஒழுக்கக் கோவை ஒன்றையும் அமுல்படுத்தினார்.

வீரப்பன், இராகுலன் என்ற இரு ஆசிரியர்களும் அடுத்த ஆசிரியர் கூட்டத்தின்போது அதிபரினது செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை தெரிவித்தனர். தாமதமாக வருகை தந்தாலும் தமது பாடங்களிலே உயர்ந்த பெறுபேறுகளைப் பெறச் செய்யும் இந்த இரு ஆசிரியர்களும் உயர்தர மாணவர்களிடையே பெருமதிப்புடையவராகக் காணப்பட்டனர். எனினும் தனது ஆலோசனைகளைப் பின்பற்றாத ஆசிரியர்களை தமது ஆசிரியர் குழாத்தில் வைத்திருக்க முடியாதென தீர்மானித்த அதிபர் இந்த இருவரையும் இடமாற்றம் செய்யுமாறு வலய கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தார். அதற்கேற்ப அவர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டனர். அடுத்த திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பமாகியபோது உரிய வகுப்புகளின் மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். திறமையான ஆசிரியர்களை மாற்றியதற்கும் அதிபரினது அதிகார நிர்வாகத்திற்கும் எதிரான சுவரொட்டிகள் பலவற்றை அவர்கள் காட்சிப்படுத்தினர். ஆசிரியர் குழு உறுப்பினர்களும் அலட்சியமாக பார்த்துக் கொண்டிருந்தனர். தனித்துவிடப்பட்ட அதிபர் தமக்கு தவறு எங்கே ஏற்பட்டது என சிந்திக்கத் தொடங்கினர்.

[பக் 3 ஐப் பார்க்க)

இந்தச் சம்பவம் / சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

(i) புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் திரு.சுதாகரனினது செயற்பாடுகளில் உள்ள **மூன்று** குறைபாடுகளைக் குறிப்பிடுக.

(அ) ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ஆ) ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(இ) ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

*( 15 புள்ளிகள்)*

(ii) அதிபர் சுதாகரன் அவர்களை நீக்கிவிட்டு நந்தவனம் மகாவித்தியாலய அதிபர் பதவிக்கு நீங்கள் நியமிக்கப்பட்டால் தற்போது பாடசாலையில் நிலவும் பாதகமான சூழ்நிலையை சீரப்படுத்துவதற்கு நீங்கள் எடுக்கும் வழி முறைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

(அ) ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(ஆ) ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

*( 10 புள்ளிகள்)*

(பக் 4 ஐப் பார்க்க)

2. சிவானந்த மத்திய மகாவித்தியாலயமானது பிரதேசத்தில் உள்ள பெயர் பெற்ற இடைநிலைப் பாடசாலையொன்றாகும். அதன் அதிபராக அண்மையில் நியமனம் பெற்று வந்த திரு. குணசிங்கம் அவர்கள் அதிபராக பலவருடங்கள் சேவையாற்றியுள்ள எதிர்கால எதிர்பார்ப்புகளுடன் உள்ள அதிபராவார்.

கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் பாடசாலையை அறிந்து கொள்வதற்காக அவர் பாடசாலையையும் சுற்றாடலையும் அவதானித்தார். பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகளின் பின்புலம், பாடசாலை பரீட்சைப் பெறுபேறுகள் பாடவிதானச் செயற்பாடுகளினால் பாடசாலை பெற்றுள்ள திறமைகள் ஆகியவை தொடர்பான தகவல்கள் அவரினால் சேகரிக்கப்பட்டன.

க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள் சாதாரண நிலையில் காணப்பட்டாலும் க.பொ.த(உயர்தர) பெறுபேறுகள் பின்னடைவாக இருந்ததை இங்கு அவதானிக்க முடிந்தது. விசேடமாக விஞ்ஞான, கணித பாடங்களின் பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. இது தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடும் போது பிள்ளைகளின் வரவு திருப்தியற்றிருந்தமையைக் காண முடிந்தது. 13 ஆம் வகுப்பின் பிள்ளைகளில் அதிகமானோர் பாடசாலை நேரத்திலும் தனியார் வகுப்புகளுக்கு செல்வதாகவும் அதனால் விஞ்ஞான பாடங்களில் செய்முறைப் பயிற்சிகளை செய்ய முடியாமையே பெறுபேறுகள் பின்னடைவதற்கு முக்கிய காரணமாவதாகவும் ஆசிரியர்களின் கருத்தாக இருந்தது.

க.பொ.த (உ.தர) பரீட்சைக்கு விண்ணப்பங்களை முன்வைக்க வேண்டியது அடுத்த மாதமெனவும் அப்போது கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்று நிருபத்திற்கேற்ப மாணவரொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 80% வரவு கண்டிப்பாக இருக்க வேண்டும் எனவும் அந்த ஏற்பாடுகள் சரியாக பின்பற்றப்பட வேண்டுமெனவும் விஞ்ஞான ஆசிரியர்கள் கவனத்திற்கு கொண்டுவந்தனர். முன்னைய அதிபர் மாணவர்களுக்குப் பயந்த காரணத்தினால் இந்த சட்டத்தை அமுல்படுத்தாமையினால் பாடசாலை பெறுபேறுகள் பின்னடைவதற்கு காரணமாக அது அமைந்ததாகவும் மேலும் கூறினர்.

இது தொடர்பாக வேறு அதிபர் ஒருவருடன் திரு.குணசிங்கம் அவர்கள் கலந்துரையாடும்போது அவர் "அது நல்ல யோசனையானாலும் அமுல்படுத்தும் போது பிரச்சினை ஏற்பட இடமுள்ளது" எனக் கூறினார். மேலும் குறித்த அதிபர் ஒருவர் அதனை நடைமுறைப்படுத்த முயற்சித்தும் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சியை கைவிட நேரிட்டதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்காத மாணவன் ஒருவன் தனது உயிரை மாய்த்துக் கொண்டதான செய்தியொன்று அண்மையில் பத்திரிகையில் வெளிவந்திருந்ததையும் அவர் ஞாபகப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் / சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

(i) இந்த நிலைமையின் கீழே அதிபர் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் எவை?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

*( 10 புள்ளிகள்)*

[பக் 5 ஐப் பார்க்க)

(ii) சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்த முன்னர் அதிபர் எடுக்கக்கூடிய **மூன்று** படிமுறைகளை விளக்குக.

(அ) ..........

(ஆ) ..........

(இ) ..........

*( 15 புள்ளிகள்)*

**3.** சந்திரபுரம் வித்தியாலயம் நகரத்தில் வசதிகள் மிகக்குறைந்த பிரதேசமொன்றில் அமைந்துள்ள 1சி (1C) வகை மகாவித்தியாலயமாகும். 1500 மாணவர்கள் அளவில் உள்ள அந்தப் பாடசாலையிலே 80 ஆசிரியர்கள் உள்ளனர். மாணவர்களில் அதிக அளவிலானோர் நகரத்தின் வர்த்தக நிறுவனங்களிலும் கைத்தொழிற் சாலைகளிலும் வேலை செய்யும் குடும்பங்களில் இருந்து வருபவர்களாகும்.

பாடசாலைக்காக மூன்று ஏக்கர் காணியொன்று உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதியளவு கட்டடங்கள் இருந்தாலும் பலவருடங்களாக அவை புனரமைக்கப்படாது கவனிப்பாரற்றுக் காணப்பட்டது. மேசைகளும் கதிரைகளும் உடைந்திருந்ததால் மாணவர்களுக்கு போதியளவு எண்ணிக்கையில் மேசை மற்றும் கதிரைகள் இல்லாது இருந்தன. கழிவறைத் தொகுதிகளும் மாசடைந்து காணப்பட்டன. குழாய் நீர் தொகுதிகளும் பராமரிப்பின்மையினால் நீர் வீண் விரயமாகியது. விளையாட்டு மைதானத்திற்காக 1½ எக்கர் காணி ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதன் அதிகளவிலான பகுதியில் பற்றைகள் வளர்ந்து காணப்பட்டன. பாடசாலையின் வளவைச் சுற்றி மதிலோ அல்லது சுற்று வேலியோ இல்லாத காரணத்தினால் மாடுகள் மட்டுமன்றி நகரில் நடமாடும் சில நபர்கள் மாலை வேளைகளில் பாடசாலைக்கு வருகை தந்து அங்கு நேரத்தை செலவிட்டு வந்தனர். பாடசாலையில் ஆசிரியர் விடுதி இல்லாததோடு அதிபரும் வாடகை வீடொன்றிலேயே வசித்து வந்தார்.

இப்பாடசாலைக்கு சில மாதங்களுக்கு முன்னர் நியமனம் பெற்று வந்த புதிய அதிபர் ஒருவர் பாடசாலையை புனரமைப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அனுப்பியிருந்தார். அதன் மொத்த செலவு 2½ மில்லியனாகும். தற்போது ஒதுக்கங்கள் இல்லாமையினால் முழுப் பணத்தையும் பெற முடியாதெனவும் 1½ மில்லியன் ரூபாய்களை அரச நிதியத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியுமெனவும் எஞ்சிய பகுதியை பாடசாலையினால் வழங்க முடியுமாக இருந்தால் செயற்திட்டத்தை அங்கீகரிக்க முடியும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபருக்கு அறிவித்தார்.

[பக் 6 ஐப் பார்க்க)

இந்தச் சம்பவம் / சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கீழேயுள்ள வினாவிற்கு சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

நீங்கள் அந்தப் பாடசாலையின் அதிபராக இருந்தால் தேவையான அளவு பணத்தை வழங்குவதற்கு எடுக்கக்கூடிய **ஐந்து** முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(i) ................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

(ii) ................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

(iii) ................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

(iv) ................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

(v) ................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

*( 05 × 5 =25 புள்ளிகள்)*

**4.** மருதடி மகாவித்தியாலயமானது மகாவலி வலயத்தின் விவசாய குடும்பங்கள் சிலவற்றில் வசித்துவரும் மக்களினது பிள்ளைகளுக்காக அமைந்துள்ள இடைநிலை பாடசாலையொன்றாகும். அங்குள்ள ஆசிரியர்களுள் பலரும் பல்கலைக்கழகங்களிலோ அல்லது ஆசிரியர் கல்விக் கல்லூரிகளிலோ இருந்து வெளியேறி முதல் நியமனத்தை பெற்ற இளம் வயதினர் ஆவார்.

திரு. பிரணவன் அவர்கள் அவ்வாறு வந்த பல்கலைக்கழக பட்டதாரி ஆவார். அவர் இந்தப் பாடசாலைக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இளம் ஆசிரியராக தரம் 12, 13 வகுப்புகளில் புவியியல், வரலாறு போன்ற பாடங்களைக் கற்பிக்கும் அவர் அர்ப்பணிப்புடன் தனது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற மாணவர்களிடையே நன்மதிப்பைப் பெற்ற துடிப்பான ஆசிரியர் ஆவார்.

செல்வி மஞ்சுளா பிரியதர்சனி அவர்கள் இந்த வருடத்திலே ஆசிரியர் கல்விக் கல்லூரியிலிருந்து வெளியேறிய விஞ்ஞான ஆசிரியை ஆவார். அவர் சற்று இறுமாப்பு தன்மையைக் காட்டினாலும் தனது கற்பித்தல் நடவடிக்கைகளில் பின்னடைவு இல்லாது கடமைகளை மேற்கொள்ளும் ஒருவராகும்.

ஆசிரியர் ஓய்வறையில் இந்த இருவரும் அதிக நேரம் மகிழ்ச்சியுடன் சம்பாசித்ததோடு படிப்படியாக அது காதல் தொடர்பாக மாறியது. அவர்கள் ஆசிரியர் ஓய்வறைக்குப் பதிலாக ஆய்வு கூடத்தின் களஞ்சியசாலைக்குச் சென்று நேரத்தை செலவழிக்க ஆரம்பித்தனர். பெரும்பாலான நாள்களில் பாடசாலை நேரத்தின் பின்னரும் பல மணித்தியாலங்கள் அவர்கள் அந்த அறையில் செலவிட்டனர். இதனால் ஆசிரியர் குழாமைப் போன்று மாணவர்களிடையேயும் இது தொடர்பாக கிசுகிசு ஏற்பட்டது. சில வேளைகளில் உரிய வகுப்புகளுக்கு செல்வதையும் கூட அவர்கள் தவறவிட்டிருந்தனர். வார இறுதி நாட்களில் இருவரும் வீட்டிற்கு செல்வதாக கூறி சுற்றுலா பயணங்களை மேற்கொள்வதாகவும் கதை உலாவியது. இந்த நிலைமை அதிபரினது காதுகளுக்கும் எட்டியது.

ஒருநாள் பாடசாலை நுழைவாயிலருகிலே இந்த இருவரினதும் நடத்தைகள் தொடர்பாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன அதிபருக்கும் அநாமதேயக் கடிதத்தின் மூலம் இந்த இருவரினதும் நடத்தைகள் முறைகேடாக இருப்பதனால் அவர்கள் வயது வந்த மாணவர்களுக்கு முறையற்ற முன் மாதிரியை வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சிரேஷ்ட ஆசிரியர்கள் சிலர் அதிபருடன் இது தொடர்பாக கலந்துரையாடி ஏதாவது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் / சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

(i) அதிபர் இந்த இருவருக்கும் அறிவுரை வழங்கும் நடைமுறைகளை எவ்வாறு ஒழுங்கமைக்கலாம்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

*( 05 புள்ளிகள்)*

(ii) அவ்வாறு அறிவுரைகள் வழங்கும்போது அந்த இருவருக்கும் உரிய விடயங்களை விளக்கும் முறையை விவரிக்குக.

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

*( 10 புள்ளிகள்)*

(iii) எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் பாடசாலையினுள் இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்க வேண்டிய வழிமுறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

*( 10 புள்ளிகள்)*

※ ※ ※